பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 29 | புதன்கிழமை | 13.03.2024 | அதிர்வு 225

## கொழும்பு தாமரைக் கோபுரத்தில்

### போதைப்பொருள் உட்கொண்ட இளைஞரும், யுவதியும் மரணம்

கொழும்பு தாமரைக் கோபுரத்தில் உள்ள உணவகம் ஒன்றில் இடம்பெற்ற விருந்துபசாரத்தின் போது போதைப் பொருள் உட்கொண்ட இளைஞரும், யுவதியும் உயிரிழந்துள்ளனர்.

06▸

# வெடுக்குநாறிமலையில் கைதானவர்களை விடுதலை செய்யாவிடின் தொடர் போராட்டம்

## கஜேந்திரன் எம்.பி. எச்சரிக்கை




வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பூசகர் உள்ளிட்ட 8 பேரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தினார்.

பூசகர் உள்ளிட்ட 8 பேர் மீதும் பொலிஸார் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வழக்குத் தொடுத்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அப்பாவிகளான 8 பேரும் தொல்பொருள் சின்னங்களைச் சேதப்படுத்தவில்லை என்றும், அவர்கள் மீது

06▸

# இந்திய மீனவரை அடக்க கடல் சாரணர் அமைப்பு!

## அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு



**இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்வதால் வடக்கின் கடல் பாதுகாப்பைக் கண்காணிப்பதற்காகக் கடல் சாரணர்கள் என்ற தொண்டர் அமைப்பை உருவாக்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

06▸

# வெடுக்குநாறிமலை விவகாரம்: விசாரணை செய்ய விசேட குழு

## அமைச்சரின் கோரிக்கை ஜனாதிபதியால் ஏற்பு



மகா சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட குழு அமைக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டார்.

06▸




ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்பவை நடக்குமா அல்லது உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு ஏற்பட்ட கதி போல இத்தேர்தல்களுக்கும் கடைசி நேரத்தில் ஆப்பு வைக்கப்படுமா என்றெல்லாம் சந்தேகம் நிலவும் இச்சமயத்தில் –

தேர்தலுக்கான காலம் நெருங்கிக் கொண்டிருக்கும் இக்கடைசி நேரத்தில் –

நாடாளுமன்ற தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டுவரும் முயற்சி ஒன்றை அரசு அவசர அவசரமாக ஆரம்பித்து இருப்பதாக செய்திகள் வெளியாகி

06▸



# பலசரக்கு பொருள்களை மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யும் அனுமதி இடைநிறுத்தம்

மிளகு உள்ளிட்ட சில பலசரக்கு பொருள்களை மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்ய அனுமதி வழங்கி வெளியிடப்பட்ட வர்த்தமானியை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மிளகு, இஞ்சி, மஞ்சள், சாதிக்காய், ஏலக்காய், இஞ்சி உள்ளிட்ட இலங்கையில் பயிரிடப்படும் சில பலசரக்கு பொருள்களை மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்ய அனுமதி வழங்கி அரசாங்கத்தினால் வர்த்தமானியொன்று அண்மையில் வெளியிடப்பட்டிருந்ததாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவை கலந்துரையாடலின் போது விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர இந்த விடயம் தொடர்பில் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

மேற்படி பலசரக்கு பொருள்களை மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்ய அனுமதி வழங்குவதனூடாக உள்நாட்டு பலசரக்கு உற்பத்தியாளர்கள் நம்பிக்கையை இழப்பதுடன், பலசரக்கு பொருள்கள் செய்கையும் இதனால் வீழ்ச்சியடையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், தற்போது உலகின் முன்னணி பலசரக்கு பொருள்களாக பெயர் பெற்றுள்ள இலங்கையின் பலசரக்கு பொருள்களின் தரம் இதனால் கடுமையாகப் பாதிக்கப்படும் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்களை ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை, மேற்படி வர்த்தமானியை இடைநிறுத்தவும் பலசரக்கு பொருள்களை மீள் ஏற்றுமதி நோக்கத்திற்காக இறக்குமதி செய்யும் தீர்மானத்தை இடைநிறுத்தவும் தீர்மானித்ததாக விவசாய, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

## உஷ்ணமான காலநிலை தீவிரமாகும்

# முதியோர்கள், நோயாளர்கள் அவதானமாக செயற்படுங்கள்!

நாட்டின் பல பகுதிகளில் உஷ்ணத்தின் அளவு தொடர்ந்தும் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், வடமேல், சப்ரகமுவ, தென் மாகாணங்களிலும் அனுராதபுரம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் மனித உடல் அதிகளவில் உணரக் கூடிய வகையில், உஷ்ணத்தின் அளவு அதிகரிக்குமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேற்படி பகுதிகளில் வசிக்கும் மக்கள் விசேட அவதானம் செலுத்த வேண்டுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதற்கமைய, பணியிடங்களில் தொழில்புரிவோர் போதுமான அளவு நீரை அருந்த வேண்டுமெனவும் முடிந்த வரை நிழலான இடங்களில் தமது பணிகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உஷ்ணமான வானிலை தொடர்பில் வயது முதிர்ந்தவர்கள், நோயாளர்கள் விசேட அவதானம் செலுத்த வேண்டுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

வாகனங்களுக்குள் சிறுவர்களை தனியே விட்டுச் செல்ல வேண்டாம் எனவும் அதிக களைப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளை மட்டுப்படுத்துமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.



இந்த நிலையில், நிலவும் வறட்சியான வானிலையால் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை மக்களை கோரியுள்ளது.

வறட்சியான வானிலை இரண்டு மாதங்களுக்கு மேல் நீடித்தால் நேர அட்டவணைக்கு அமைய நீர் விநியோகிக்கப்பட நேரிடும் என தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.




# கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு விரைவில் புதிய பயணிகள் முனையம்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய பயணிகள் முனையமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாக துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய பயணிகள் முனையத்தில் 30 வெளியேறும் கரும பீடங்கள் நிறுவப்படவுள்ளன என அதன் செயலாளர் ருவன்சந்ர குறிப்பிட்டுள்ளார்.

தற்போது காணப்படும் பயணிகள் முனையத்தில் போதுமான இடவசதி இன்மையால் புதிய பயணிகள் முனையத்தை நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னதாக நிர்மாணப்பணிகளை நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக உள்நாட்டு நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் ருவன்சந்ர தெரிவித்துள்ளார்.

# மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒத்துழைப்புத் தொடர்பில் இலங்கை - இந்திய அதிகாரிகள் கூட்டாகக் கலந்தாய்வு



இந்தியாவின் மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் செயலாளர் ஸ்ரீ புபிந்தர் சிங் பல்லாவின் தலைமையிலான தூதுக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

நாட்டில் உள்ள மீள்புதுப்பிக்கத்தக்க முதலீடுகளுக்கான வாய்ப்புகள் தொடர்பில் இந்திய ஆய்வாளர்களுக்கும் இலங்கையின் அதிகாரிகளுக்கும் இடையே கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மின்சக்தி , எரிசக்தி அமைச்சில் நேற்று காலை இடம்பெற்ற தூதுக்குழுவினருடனான சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒத்துழைப்பு, புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகள், தொழில்நுட்ப பரிமாற்றங்கள், முதலீட்டு வாய்ப்புகள், அரசாங்க கொள்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை, மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒத்துழைப்பின் ஊடாக இந்திய – இலங்கை இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இந்தக் குழுவினரின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# இளம் குடும்பஸ்தர் வெட்டிக்கொலை; சந்தேகநபர்கள் நால்வர் நேற்று கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைப் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடத்தப்பட்டு வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக 4 பேர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி பகுதியில் பதுங்கியிருந்த நிலையில் நால்வரும் யாழ்ப்பாணம் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வட்டுக்கோட்டை, அராலி பகுதியைச் சேர்ந்த 37, 32, 25, 22 வயதானவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகநபர்களிடம் இருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

வட்டுக்கோட்டை – மாவடி பகுதியைச் சேர்ந்த தவச்செல்வம் பவித்திரன் (வயது 23) என்ற இளம் குடும்பஸ்தரே நேற்றுமுன்தினம் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.



# ஆங்கில மொழிமூலக் கல்விக்காக புதிதாக 2,500 ஆசிரியர்கள் சேவையில் இணைப்பு

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை

ஆங்கில மொழிமூல கல்விக்காக புதிதாக 2,500 ஆசிரியர்களை சேவையில் இணைந்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

கல்வி முன்னேற்றத்திற்காக அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவைக் குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடிய போது இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் பிரதமர் தினேஷ் குணவர்தன, கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த உள்ளிட்ட 8 அமைச்சர்கள் உள்ளனர்.

தேசியக் கல்விக் கொள்கைக் கட்டமைப்பு குறுகிய கால மற்றும் இடைக்கால கல்வி மாற்றத்துக்கான செயல்முறைகளைக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் கல்வித் துறையில் தற்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமானதும், விரைவானதுமான நடவடிக்கைகள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



அதன்படி, தேசிய ஆசிரியர் சபையினை நிறுவுவதற்கான சட்டமூலம் ஒரு மாதத்திற்குள் அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டு, நாடாளுமன்றத்திலும் சமர்பிக்கப்பட வேண்டுமெனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் 8 பாடங்களையும் ஆங்கில மொழியில் கற்பிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எனினும், 24 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் 765 பாடசாலைகளில் மாத்திரமே ஆங்கில மொழியில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

ஆங்கில மொழியில் கல்வியைத் தொடர சமூகத்தில் பெரும் கேள்வி நிலவுவதால் அதற்கான பாடசாலைகளின் எண்ணிக்கையை ஆயிரமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி அமைச்சரவை உப குழு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தப் பணியைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கு 2,500 புதிய ஆசிரியர்களின் சேவையைப் பெறுக்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், ஆங்கில மொழியில் பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆயிரம் ஓய்வுபெற்ற ஆசிரியர்களை 3 வருட ஒப்பந்த கால அடிப்படையில் விரைவில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேநேரம், தற்போது கல்வியற் கல்லூரிகளில் ஆங்கில மொழியில் கல்வியைப் பெற்று பட்டம் பெறவிருக்கும் 400 ஆசிரியர்களும் இதற்குள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இதேவேளை, இந்த வருடம் முதல் அமுலாகும் வகையில், தேசியக் கல்விச் சான்றிதழ்களுக்கு மேலதிகமாக மாணவர்கள் பாடசாலை கல்வியை நிறைவுச் செய்தமைக்கான சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.















# இலங்கைக்கான புதிய தூதர்கள் நியமனங்களை நேற்று ஏற்றனர்

இலங்கைக்கு புதிதாக நியனம் பெற்று வந்திருக்கும் தூதுவர் ஒருவரும், உயர்ஸ்தானிகரும் கொழும்பு கோட்டை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

தாய்லாந்தின் இலங்கைக்கான புதிய தூதுவராக நியமனம் பெற்றிருக்கும் பைட்டூன் மஹாபன்னபோர்ன், பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் உயர்ஸ்தானிகர் நியமனம் பெற்றிருக்கும் மேஜர் ஜெனரல் பஹிம் உல் அஸீஸ் ஆகியோரே இவ்வாறு நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தார்.

இதன்போது, வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டனர்.

















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இருக்கின்றன.

நாடாளுமன்றத்துக்கு 160 உறுப்பினர்களை நேரடியாகத் தொகுதி வாரியாகவும், எஞ்சிய 65 பேரை விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையிலும்தெரிவுசெய்யும்ஒரு யோசனைத் திட்டம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை கடந்த வாரம் அமைச்சரவைக்கு நீதி, அரசமைப்பு மறுசீரமைப்பு விவகார அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ சமர்ப்பித்திருக்கின்றார் என்று தெரிய வருகின்றது.

இத்தகைய திட்டம் முன்னரும் பல அரசுகளினால் அவ்வப்போது கொண்டு வரப்பட்டு, மேற்கொண்டு நகர்த்த முடியாமல் இடையில் கைவிடப்பட்டமைதான் வரலாறு.

இப்போது மீண்டும் ஒரு தடவை அந்த முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த யோசனைத் திட்டத்தை நடைமுறையாக்கம் செய்வதற்கு அரசமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அதற்குக் குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவை.

இந்த உத்தேசத் தேர்தல் முறைமை மாற்றும் திட்டத்திற்கு எதிரணிகளையும் வளத்துப் போட்டு, மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறலாம் என்று ஆளுந்தரப்பு கனவு காண்கின்றதோ என்னவோ!

ஆயினும், தேர்தல்கள் நெருங்கும் சமயத்தில் இத்தகைய தலைகீழ் மாற்றங்களுக்கு முயற்சிப்பது தேர்தல்களைக் குழப்புவதற்கான கபடத் திட்டமோ என்ற எண்ணத்துடன்தான் இந்த விடயத்தை எதிர்க்கட்சிகள் அணுகும்.

இதனால் உத்தேச திட்டத்திற்கு இன்றைய நிலையில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவைப் பெறுவதோ, அதை நடைமுறையில் சட்டமாக்குவதோ இலகுவாகச் சாத்தியப்பட போவதில்லை என்றே தோன்றுகிறது.

## இந்திய மீனவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“வட பகுதி கடற்பரப்பில் இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் கடற்படையினர் முடியுமானவரை தங்களது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும், இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடற்பரப்பின் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மற்றுமொரு முயற்சியாக இந்த யோசனையை நான் அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளேன்.

இந்தப் படையின் ஊடாக இந்திய மீனவர்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து கடற்படையினரது உதவியுடன் கட்டுப்படுத்த முடியும்.” - என்றார்.

## வெடுக்குநாறிமலை விவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மேலும், குறித்த சம்பவம் தொடர்பான உண்மைகளைக் கண்டறிந்து, தேசிய நல்லிணக்கத்துக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் எதிர்காலத்தில் இடம்பெறாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அமைச்சரால் ஜனாதிபதியிடம் வலியுறுத்தப்பட்டது.

# கொக்கு வேட்டைக்குச் சென்றவர்களின் துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் மரணம்!

## சந்தேகத்தில் கூடச் சென்ற ஆசிரியர் கைது



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கூடுபத்தின சேனை காட்டை அண்டிய பகுதியில் கொக்குகளை வேட்டையாடச் சென்றவர்களின் துப்பாக்கி வெடித்ததில் ஆண் ஒருவர் சாவடைந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வாழைச்சேனை, செம்மன் ஓடையைச் சேர்ந்த 32 வயதுடைய அத்துல் காதர் இம்தியாஸ் என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கொக்குகளை குறிபார்த்துச்சுடஎத்தனித்தபோதுதுப்பாக்கிவெடித்ததில் கழுத்துப் பகுதியில் குண்டு பாய்ந்ததில் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அவருடன் கூடச் சென்ற நண்பனான 52 வயதுடைய ஆசிரியர் ஒருவரைப் பொலிஸார் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வெடுக்குநாறிமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தொல்பொருள் திணைக்களத்தினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை என்றும் கஜேந்திரன் எம்.பி. கூறினார்.

மேற்படி 8 பேரும் விடுவிக்கப்படாவிட்டால் நீதி கோரி தொடர் கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுப்போம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

பின்னணி

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி மகா சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது ஆலயத்துக்குள் நுழைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வழிபாட்டில் ஈடுபட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்தனர்.

அவர்களைக் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் விசாரணைகள் நிறைவு பெறாத காரணத்தால் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

காலை 9 மணி முதல் மூன்று தடவைகள் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், தொல்பொருள் திணைக்களத்தினர் அங்குள்ள தொல்பொருள் சின்னங்களைச் சந்தேகநபர்கள் சேதப்படுத்தினர் என்று மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து மேற்படி சந்தேக நபர்கள் 8 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆலயப்பூசகர் உள்ளிட்ட 8 பேர் சார்பில் ஜனாபதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான என்.ஸ்ரீகாந்தா, க.சுகாஷ், தி.திருஅருள், கிறிஸ்ரினா, ஜிதர்சன், சஜித்தா, சாருகேசி, விதுசினி, கீர்த்தனன், யூஜின் ஆனந்தராஜா, கொன்சியஸ் உள்ளிட்ட பலர் மன்றில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இருவரும் உடல் நலம் பாதிக்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர் என்று மருதானைப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

முல்லேரியா, உடுமுல்ல பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட அழகு நிலையம் ஒன்றின் முகாமையாளரான ஹெட்டியாராச்சி ரசாங்கிகா ருக்ஷானி (வயது 27), தெஹிவளையில் வசித்து வந்த சமிந்து திரங்க பெர்னாண்டோ (வயது 22) இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.









# சவால்களுக்கு ஈடுகொடுக்கும் எதிர்காலச் சந்ததியை கட்டியெழுப்பும் கல்வி முறைமை நாட்டுக்குத் தேவை

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“சாவால்களைக் கண்டு தப்பி ஓடாமல், அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமது கொள்கைகளில் உறுதியாகவிருந்து, முன்னேற்றிச் செல்லும் சந்ததியை, இந்நாட்டுக் கல்வியின் மூலம் உருவாக்கி, வலுவூட்ட வேண்டும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சங்கரீ லா ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெஸ்லி கல்லூரியின் 150 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

”வெஸ்லி கல்லூரிக்கு 150 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவில் பங்கேற்கக் கிடைப்பது மகிழ்ச்சிக்குரியது.

அதேபோல் சுதந்திர இலங்கையைக் கட்டியெழுப்புதற்கு வெஸ்லி கல்லூரி ஆற்றிய சேவைக்கும் நன்றி கூறுகிறேன்.

இக்கல்லூரியின் ஆண்டுப் பூர்த்தி விழாவொன்றில் இரண்டாவது தடவையாக பங்கேற்கிறேன். வெஸ்லி கல்லூரி நாட்டிற்கு ஆற்றியுள்ள சேவைகளைக் கருத்தில் கொண்டு இதில் பங்கேற்க நினைத்தேன்.

தேசத்தைக் கட்டியெழுப்பிய பிரஜைகளை உருவாக்கும் பணியில் வெஸ்லி கல்லூரி அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளது. வெஸ்லி கல்லூரி பிரஜைகளையும், தலைவர்களையும் உருவாக்கியது. அவர்கள் தேசத்தை வடிவமைத்தனர்.

நாம் கல்வி கற்ற காலத்தில் அரச பாடசாலைகள், தனியார் மற்றும் உதவிகளைப் பெற்று இயங்கும் பாடசாலைகள் என பல பிரிவுகள் இருந்தன. துரதிஷ்டவசமாக நீங்கள் அனைவரும் அரசாங்க பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகள் என இரு பிரிவுகளுக்குள் மாத்திரம் சிக்கிக் கொண்டுள்ளீர்கள். அதனால் கல்வி முறையில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றம் குறித்து ஆராய்ந்து வருகிறோம்.




அதேபோல் நாட்டிற்கு சேவையாற்றிய பாடசாலைகளுக்கு உதவி செய்யும் திட்டமொன்றை முன்மொழியவும் எதிர்பார்க்கிறோம்.

நீங்கள் இந்த நாட்டுக்கு சேவையாற்றியுள்ளீர்கள். இன்னும் பல சேவைகளை செய்யலாம். அதற்குத் தேவையான மாற்றங்களை நாம் ஏற்படுத்துவோம். அதற்கான புதிய திட்டங்கள் பலவும் கல்வி அமைச்சரிடம் உள்ளன.

கொவிட் காரணமாக பரீட்சைகளை நடத்தும் காலப்பகுதி தொடர்பில் ஏற்பட்டிருந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. ஆங்கிலக் கல்வியை ஊக்குவிக்க வேண்டிய பல பாடசாலைகள் உள்ளன. வெஸ்லி கல்லூரி போன்ற பாடசாலைகளுக்கு அது தொடர்பிலான பெரும் பொறுப்புகள் உள்ளன. இக்கல்லூரி இலங்கையை வடிவமைத்த கல்லூரி என்பதை மீண்டும் நினைவூட்டுகிறேன். எதிர்காலத்திலும் அதனை செய்ய முடியும் என நம்புகிறேன். ” – என்றார்.















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஜே.வி.பியின் ஏளனப் பேச்சு

“சர்வதேச நாணய நிதியத்தை நாங்கள் சந்திப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையில்லை. நாங்கள் விரும்பினால் எந்த நேரத்திலும் சர்வதேச நாணய நிதியத்தைச் சந்திப்போம். எங்களை வரும் 14ஆம் திகதி (அதாவது நாளை) சந்திக்குமாறு சர்வதேச நாணய நிதியம் கேட்டுள்ளது. நாம் சந்திப்போம். சர்வதேச நாணய நிதியத்தை நாம் சந்திப்பதற்கு ஜனாதிபதியின் காலில் துவண்டு போக வேண்டிய தேவை இல்லை.”

- இப்படித் திமிர்த்தனமாகக் கூறியிருக்கின்றார் ஜே.வி.பியின் பிரமுகர் சுனில் ஹந்துநெத்தி.

அவர் கூறியமையில் உண்மை இருக்கலாம். ஆனால் அக்கருத்து ஒன்று - முட்டாள்தனமானது; அடுத்தது - அர்த்தமற்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை ஜே.வி.பி. மட்டுமல்ல, எந்த அரசியல் கட்சியின் பிரதிநிதிகளும் சந்திக்கலாம். குசலம் விசாரிக்கலாம். சேர்ந்து உணவருந்தி மகிழலாம். படம் பிடித்து ஊடகங்களில் வெளியிடலாம். அதில் ஒன்றும் பிரச்சனை இல்லை. ஆனால், அதுவல்ல விடயம். சர்வதேச நாணய நிதியத்துடன் சந்தித்து பேசி, ஆக்கபூர்வமான விடயங்களைக் கலந்தாலோசனை செய்ய முடியுமா, நாணய நிதியம் வெளிப்படையாகப் பேசுமா என்பதுதான் கேள்வி.

அரசாங்கத்தினூடான உத்தியோகபூர்வ சந்திப்பு, கலந்தாலோசனை என்று இல்லாமல் ஒரு கட்சியின் பிரதிநிதிகள் - சர்வதேச நாணய நிதியத்தின் பிரமுகர்கள் என்ற பெயரில் நடக்கும் சந்திப்புகள், கலந்துரையாடல்கள் என்ன கோதாவில் அமையும், அவற்றில் உண்மையான பிரச்சினைகளை மனம் திறந்து பேச இடம் உண்டா, அதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என்பதுதான் கேள்வி.

அது முடியாது - சாத்தியமே அற்றது - என்பதைப் புரிந்து கொள்ளாமல் துடுக்குத்தனமாகப் பேசி, பொறுப்பற்று நடந்து கொள்கின்றார் சுனில் ஹந்துநெத்தி என்றே தோன்றுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் பேசக்கூடிய விடயங்கள் குறித்து நேற்று முன்தினம் இவ்விவகாரத்தை ஒட்டி ஜனாதிபதி உட்பட அரசு தரப்புப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய போது விலாவாரியாக எடுத்துரைத்திருக்கின்றார் சுமந்திரன்.

கடன் நெருக்கடியில் இருந்து இலங்கை நாட்டைப் பிணையெடுப்பது தொடர்பில் இலங்கை அரசுடன் உடன்பாட்டுக்கு வந்துள்ள சர்வதேச நாணய நிதியம், அது தொடர்பில் பல பரிந்துரைகளை, நிபந்தனைகள்போலஇலங்கைக்குவிதித்திருக்கின்றது.

அந்தப் பரிந்துரைகள் நாணய நிதியத்தினால் எழுந்தமானமாக விதிக்கப்பட்டவை அல்ல. ஒவ்வொன்றுக்கும் புள்ளிவிவர அடிப்படையிலான பகுப்பாய்வு அறிக்கைகள் பின்னணியில் உண்டு.

அவற்றின் அடிப்படையில்தான் அந்த விடயங்கள் குறித்து அரசுடனும் சர்வதேச நாணய நிதியத்துடனும் பேச முடியும். பேச வேண்டும்.

ஆனால் அரசு தரப்பின் இணக்கம் இன்றி, பிறதரப்புகளுக்கு அந்தப் பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் விடயங்களை நாணய நிதியம் பகிராது. அப்படி சம்பந்தப்பட்ட பங்காளி அரசுக்குத் தெரியாமல் - அதன் அனுமதி இல்லாமல் - பகிர்வது நாணய நிதியத்தின் முறைமையும் அல்ல என்பதை நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் சுமந்திரன் எம்.பி. வெளிப்படையாகச் சுட்டிகாட்டி இருந்தார்.

அவர் குறிப்பிடும் பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் விடயங்களை சர்வதேச நாணயம் நிதியம் மூலம் பகிர்ந்து ஆராய்வதற்கு அந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருந்தார்.

ஆக, இலங்கைஅரசாங்கத்தைத்தவிர்த்து, நேரடியாக ஒரு கட்சி என்று சர்வதேச நாணய நிதியத்துடன் ஜே.வி.பியோ அல்லது பிற கட்சிகளோ பேச்சுக்கு அனுமதி கேட்டுப் போனால் சர்வதேச நாணய நிதியம் பேச்சு நடத்தும். சந்திக்கும். உரையாடும். ஆனால் மேற்படி ஒவ்வொரு விடயத்தையும் ஒட்டிய தமது பகுப்பாய்வுகள், புள்ளிவிவர அறிக்கைகளை வெளிப்படையாக முன்வைத்து நாணய நிதியம் பேசாது. சம்பந்தப்பட்ட அரசுத் தரப்பில் முறையான அனுமதி இல்லாமல் அந்த விடயங்களை நாணய நிதியம் கலந்துரையாட முன் வராது, பேச இணங்காது என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

இத்தகைய பின்புலத்தில் வெறுமனே குசலம் விசாரிக்கவும், படம் பிடித்து பத்திரிகையில் போடவும் சர்வதேச நாணய நிதியப் பிரதிகளை கட்சிகள் சந்திப்பதில் அர்த்தமில்லை.

விடயங்கள் - விவரங்களை - பகுப்பாய்வுப் புள்ளி விவரங்களின் அடிப்படையில், பொருளாதாரக் கொள்கை கோட்பாடுகளின் அடிப்படையில், பேச வேண்டிய தரப்பான சர்வதேச நாணய நிதியத்துடன் பேசுவதற்கு அதற்கான - முறைப்படியான - அனுமதி, அங்கீகாரத்துடன் போவதே பொருத்தமானது. பயனுள்ளது. இது சுனில் ஹந்துநெத்திக்குப் புரியவில்லையோ அல்லது புரிந்தும் மக்களுக்கு ஏளனப் பேச்சு மூலம் கயிறு விடுகின்றாரோ தெரியவில்லை.

# குடியுரிமை திருத்தச் சட்டத்தின் விதிகள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட மாட்டாது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



இந்திய மத்திய அரசினால் அறிவிக்கப்பட்ட குடியுரிமை திருத்தச் சட்டத்தின் விதிகள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட மாட்டாது என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டம் சிறுபான்மையினர் மற்றும் தமிழகத்தில் உள்ள முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு எதிரானது என்ற கவலைகள் அதிகரித்துள்ள நிலையில் தமிழக முதல்வர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

குடியுரிமை திருத்தச் சட்டத்தை இந்தியா முழுவதும் அமுலுக்கு கொண்டு வருவதாக ஆளும் பாரதிய ஜனதா கட்சி தெரிவித்துள்ளது.

இந்த சட்டத்தின் மூலம் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் இந்தியாவுக்குள் நுழைந்த, முஸ்லிம் அல்லாத மதப்பிரிவினர் சட்டவிரோத குடியேறிகளாக கருதப்பட மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களுக்கு இந்திய குடியுரிமை பெறவும் வழிவகை செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் மதச்சார்பின்மை எனும் இந்தியாவின் அடித்தளத்தை இந்த சட்டம் சிதைப்பதாக எதிர்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

அத்துடன், மதத்தை அடிப்படையாக கொண்டு ஒரு நாட்டின் குடியுரிமை சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்படக்கூடாது எனவும் வலியுறுத்தப்படுகிறது.

இந்தநிலையில் 2014ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு பின்னர் தமிழகத்தில் தஞ்சமடைந்த இலங்கையர்கள் இந்த சட்டத்துக்குள் உள்வாங்கப்பட மாட்டார்கள் என்ற கவலை அதிகரித்துள்ளது.

இது அவர்களுக்கு நல்வாழ்வு மீதான தாக்கம் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான பின்னணியில் குறித்த சட்டத்தின் விதிகள் தமிழகத்தில் அமுல்படுத்தப்பட மாட்டாது என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



# முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் இலங்கை தூதரகம் சென்றுவர ஏற்பாடு

## தமிழக அரசு தகவல்

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட முருகன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர் கடவுச்சீட்டு பெறுவதற்கான நேர்காணலில் பங்கேற்க இலங்கை துணை தூதரகத்துக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர் என தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நளினி தாக்கல் செய்துள்ள மனுவில்,"முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து உச்ச நீதிமன்றம் 7 பேரையும் விடுவித்தது. இந்த நிலையில், இலங்கை குடிமகன் என்பதால் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் எனது கணவர் முருகன் தங்கவைக்கப்பட்டுள்ளார். லண்டனில் வசிக்கும் தன் மகளுடன் சேர்ந்து வாழ விரும்புவதால், அனைத்து நாடுகளுக்கும் செல்வதற்கான கடவுச்சீட்டு வழங்க கோரி இருவரும் விண்ணப்பித்திருந்தோம். நேர்காணலுக்காக ஜனவரி 30ஆம் திகதி அழைக்கப்பட்டோம்.

தன்னுடைய நேர்காணல் முடிந்துவிட்டது. இந்த நேர்காணலில் கலந்துகொள்ள அனுமதிக்காததால், கணவர் முருகன், இலங்கை துணை தூதரகம் அழைத்தபோது ஆஜராக முடியவில்லை. திருச்சி முகாமில் உள்ள மோசமான சூழல் காரணமாக ஏற்கெனவே ஒரு மாதத்தில் 2 பேர் இறந்துள்ளனர். எனவே, என்னுடைய கணவருக்கு எதுவும் நடப்பதற்கு முன்பாக, நாங்கள் இருவரும் மகளுடன் சேர்ந்துவாழ விரும்புகிறோம்.

எனவே எனது கணவர் முருகன் சென்னையில் உள்ள இலங்கை தூதரகத்துக்குச் சென்று நேர்காணலில் கலந்து கொள்வதற்கான அனுமதியை வழங்க மத்திய மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும். அங்கு சென்று வருவதற்கு பாதுகாப்பு தேவைப்படும்பட்சத்தில், உரிய பாதுகாப்பு வழங்க காவல் துறைக்கு உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது, முருகன் கடவுச்சீட்டு பெறுவதற்கான நேர்காணலில் பங்கேற்க இலங்கை துணை தூதரகத்திடம் முன் அனுமதி பெற, திருச்சி மாவட்ட ஆட்சியருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், குமரேஷ் பாபு ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது பொலிஸ் தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர்.முனியப்பராஜ், முருகனின் நேர்காணலுக்காக அனுமதி பெறப்பட்டுள்ளது. முருகனை தவிர முகாமில் இருக்கும் ரொபர்ட் பயாஸ் மற்றும் ஜெயக்குமார் ஆகியோரும் கடவுச்சீட்டு பெறுவதற்காக அழைத்துச் செல்ல கோரிக்கை வைத்தனர். எனவே, இன்று அவர்களும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் தயாராக இருக்கிறது.

இன்று அதிகாலை ஐந்து மணிக்கு திருச்சி முகாமில் இருந்து புறப்பட்டு 11.30 மணியளவில் சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்துக்கு அழைத்து வரப்படவுள்ளனர் என்று தெரிவித்தார். இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், நளினி தொடர்ந்த வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

# 15 பேருடன் பயணித்த ரஷ்ய விமானம் விபத்து



ரஷ்யாவின் மேற்கு பகுதியில் நேற்று இராணுவ போக்குவரத்து விமானமொன்று விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது, 8 ஊழியர்கள், 7 பயணிகள் என மொத்தம் 15 பேர் விமானத்தில் பயணித்துள்ளனர்.

இந்த நிலையில், விமானத்தில் இருந்தவர்களில் ஒருவர் கூட உயிர்பிழைத்திருக்க வாய்ப்பு இல்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்தோடு, இவானோவா பிராந்தியத்தில் விமானம் விழுந்து நொருங்கியுள்ளதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, விமானம் புறப்படும்போது என்ஜினில் தீப்பற்றியதுதான் விபத்துக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

# காசாவில் வன்முறைகளுக்கு மத்தியில் ரமழான் நோன்பு மாதம் தொடங்கியது



காசாவில் கடுமையான போர், பசி, பஞ்சத்துக்கு மத்தியில் ரமழான் மாதம் தொடங்கியுள்ளது.

இதனிடையே, காசாவில் உதவி கோருபவர்களை குறிவைத்து மீண்டும் இஸ்ரேலியப் படைகள் தாக்குதல் நடத்தியதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேல் – காசா போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. காசாவில் ரமழான் மாதம் போர், பசி, பஞ்சத்துக்கு மத்தியில் தொடங்கியுள்ளது. லெபனான் – இஸ்ரேல் எல்லையில் இருந்து கிட்டத்தட்ட 100 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள லெபனானின் பால்பெக் அருகே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் பல மக்கள் காயமடைந்துள்ளனர். மேலும், காசாவில் உதவி கோருபவர்களை மீண்டும் இஸ்ரேலியப் படைகள் குறிவைத்து தாக்குதல் நடத்தியதில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர்.

வடக்கில் 2 ஆயிரம் மருத்துவப் பணியாளர்கள் பஞ்சத்தை எதிர்கொள்கின்றனர் என காசா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தற்போது வரை, காசாவில் பலி எண்ணிக்கை 31 ஆயிரத்து 45 ஆக அதிகரித்துள்ளது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 72 ஆயிரத்து 654 ஆக உயர்ந்துள்ளது. இஸ்ரேலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1,139 ஆகும்.

காசாவின் தெற்கு எல்லை நகரமான ரஃபாவில், 1.5 மில்லியன் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர். போருக்கு மத்தியில் காசாவில் இஸ்லாமியர்களின் புனித நோன்பான ரமழான் தொடங்கியுள்ளது.

இது குறித்து வருத்தம் தெரிவிக்கும் நபர் ஒருவர், "நாங்கள் எதையும் தயார் செய்யவில்லை. இடம்பெயர்ந்த மக்களுக்கு என்ன இருக்கிறது. ரம்ஜானின் மகிழ்ச்சியை நாங்கள் உணரவில்லை. மக்கள் குளிரில் கூடாரங்களில் தங்கியிருப்பதைப் பாருங்கள்" – என்றார்.

காசாவில் எங்கும் பாதுகாப்பாக இல்லை என்றும், தாங்கள் செல்லும் இடமெல்லாம் இஸ்ரேலியர்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்துவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அந்த மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

"புனித ரமலான் மாதம் தொடங்கிவிட்டது. உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் நோன்பு நோற்கிறார்கள், தங்கள் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுகிறார்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாட்டில் தங்களை அர்ப்பணித்து வருகின்றனர். ஆனால், காசா முஸ்லிம்களாகிய எங்களுக்கு, இந்தப் புனித மாதம் மனவேதனை மற்றும் துக்கம் நிறைந்தது.

இஸ்ரேலிய இராணுவத்தின் கைகளில் சிக்கி வேதனை அனுபவித்து வருகிறோம். ரமழான் தொடங்கியும் அதன் வன்முறையும், கொடூரமும் நிற்கவில்லை, குறையவில்லை. கடந்த ரமலான்களின் நினைவுகள் எங்களை அரவணைக்கின்றன." – என்றனர்.



# ஐ.எம்.எவ். பிரதிநிதிகளை அடுத்த வாரம் சந்திப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



அடுத்த சில நாட்களில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை ஐக்கிய மக்கள் சக்தி சந்திக்கவுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் 1120 ஆவது கட்டமாக, 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை கம்பஹா, தொம்பே, மல்வான மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்நாட்டில் சிசுக்கள், குழந்தை மற்றும் தாய்மார்களது ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துள்ளது. 2022 இல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில், 5 - 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 25 வீத குழந்தைகள் எடை குறைந்த குழந்தைகள் என்பது தெரியவந்துள்ளது.

இதுபோன்ற இன்னும் பல புள்ளிவிவரங்கள் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்துவருவதையும், தாய்மார்களும் குழந்தைகளும் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்படக்கூடியவர்களாக மாறி வருவதையும் எடுத்துக்காட்டுகின்றன.

அடுத்த சில நாட்களில் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளை ஐக்கிய மக்கள் சக்தி சந்திக்கவுள்ளது. இந்நாட்டில் தாய்மார்கள், சிசுக்கள், குழந்தைகள் மற்றும் பாடசாலை பிள்ளைகளின் ஊட்டச்சத்து குறைபாடு நிலையை உடனடியாகப் போக்க சர்வதேச நாணய நிதியத்தின் விசேட ஒத்துழைப்பு வேலைத்திட்டம் தேவை.

சர்வதேச நாணய நிதியம் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பிற நிதி நிறுவனங்களை ஒன்றிணைத்து ஒரு சிறப்பு நிதயத்தை நிறுவி, இந்த போசாக்கின்மை நிலை



யிலிருந்து விடுபட விசேட தேசிய வேலைத்திட்டமொன்று தேவை.

ஊட்டச்சத்து குறைபாட்டின் வளர்ச்சி ஒரு தீய சுழற்சியை உருவாக்குதற்கு சமன். இது நாட்டின் உற்பத்தித் திறனில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

அனைத்து அரச பாடசாலைலிகளிலும் அனைத்து மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கும் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டின் எதிர்காலம் சிறுவர்கள் என்பதால் அவர்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும்.” - என்றார்.





# வெடுக்குநாறிமலையில் கைதுசெய்யப்பட்டவர்களின் உறவுகள் நீதிமன்றம் முன்பாகக் கண்ணீர் போராட்டம்

(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததையடுத்து, அவர்களின் உறவினர்கள் நீதிமன்றம் முன்பாகக் கண்ணீர் விட்டு கதறி அழுதனர்.

கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் கைவிலங்கிடப்பட்டு சிறைச்சாலைக்கு உத்தியோகத்தர்கள் அழைத்துச் செல்லும் அந்தக் காட்சியைப் பார்த்து நீதிமன்றத்துக்கு முன்பாக நின்ற அவர்களின் உறவினர்கள், ”எந்தவொரு குற்றமும் செய்யாமல் இறைவனை வழிபட்டமைக்காக எமது உறவுகள் இவ்வாறு சிறைவாசம் அனுபவிக்கின்றார்கள்” – என்று தெரிவித்து கண்ணீர் மல்கி அழுதனர்.

அவர்களைக் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் விசாரணைகள் நிறைவு பெறாத காரணத்தால் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இந்நிலையில், நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நேற்று நீதிமன்றத்தில் அவர்களை முற்படுத்திய சமயத்தில் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.








# வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட காணிகள் நேற்றுக் கையளிப்பு

யாழ்ப்பாணம் – வலிகாமம் வடக்கில் அண்மையில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் பொதுமக்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் மற்றும் இராணுவத்தினர் பார்வையிட்டு காணிகளை பொதுமக்களிடம் கையளித்தனர்.

ஜே - 235 காங்கேசன்துறை வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் 20.32 ஏக்கர் காணி 52 பேருக்கும், ஜே - 240 தென்மயிலை கிராம சேவையாளர் பிரிவில் 25.02 ஏக்கர் காணி 41 பேருக்கும் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உயர் பாதுகாப்பு வலயமாக பாதுகாப்பு தரப்பினரது கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் ஒரு தொகுதி காணி நிலங்கள் விடுவிக்கப்பட்டமைக்கான ஆவணப் பத்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

ஜே -241 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வறுத்தலைவிளான் பகுதி எதிர்வரும் 20ஆம் திகதிக்கு பின்னர் விடுவிக்கப்படுமென தெல்லிப்பழை பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

காணிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் பழைய வீடுகளின் கதவு, நிலை, உள்ளிட்ட பொருள்களைத் திருடிச் செல்லும் வாய்ப்பு காணப்படுவதால் காணிகளுக்கு உரிய பாதுகாப்பை மேற்கொண்டு தருமாறு காணிகளைப் பார்வையிட்ட காணி உரிமையாளர்கள் கேட்டுக் கொண்டனர்.










# ரணில் தன் மானத்தைக் காப்பாற்றக் கேட்டமையால் சுமந்திரன் அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருக்கலாம்

## இப்படி வியாக்கியானம் கூறுகிறார் கோவிந்தன் கருணாகரன்




(கனகராசா சரவணன்)

ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஆ.சுமந்தரனிடம் நீயாவது வந்து எனது மானத்தைக் காப்பாற்று எனக் கேட்டிருக்கலாம். அதனால் அவர் தனிப்பட்ட ரீதியில் சர்வதேச நாணய நிதிய கூட்டத்திற்கு சென்று இருக்கலாம். எனவே அவர் கூட்டத்திற்குச் சென்றமைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள அவரின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாடு தற்போதும் பொருளாதார ரீதியில் உலகத்தில் இருந்து அந்நியப்பட்டிருக்கின்றது. எனவே இந்த நாட்டு நிலைமையை உணர்ந்து கொள்ளாமல் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறை தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சிவராத்திரி தினம் இந்துக்களுக்கு ஒரு முக்கியமான நாள். சிவபெருமான் இந்துக்களின் முதன்முதல் கடவுள். இந்த நிலையில் சிவராத்திரிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், ஆலயக் குரு மற்றும் பக்தர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தொல்பொருள் திணைக்களம் என்கின்ற பெயரில் எங்கள் பிரதேசங்கள் பல கபளீகரம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில் வெடுக்குநாறிமலையும் கபளீகரம் செய்யப்படுகின்றது.

இந்த நேரத்தில், இனங்களுக்கு இடையே நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும். வடக்கு,கிழக்கில் அமைதியைக் கொண்டுவரவேண்டும். 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல் படுத்தவேண்டும். புலம் பெயர் தேசத்தில் இருக்கின்ற தமிழ் தனவந்தவர்கள் இலங்கையில் வந்து முதலிடவேண்டும் என அரசாங்கமும் ஜனாதிபதியும் வாய்கிழியக் கூறிக் கொண்டு, மறைமுக நிகழ்சி நிரலில் வடக்குக் கிழக்கில் தமிழினத்தின் கலை, கலாச்சாரத்தை ஒழிக்கும் ஒரு வேலைத் திட்டத்தின் அங்கமாக இந்த வெடுக்குநாறி சம்பவத்தைப் பார்கின்றோம்.

அரசமைப்பின் பிரகாரம் கடந்த காலங்களில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய மாகாணசபை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ளன. அதேவேளை எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனபதிபதிக்கு இருக்கின்றது. ஆனால் எதிர்வரும் ஜப்பசி மாதத்திற்கு முன்னர் அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் நடாத்தியாக வேண்டும். அதற்கு உரிய பணம் கடந்த வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த வருடத்தில் இரண்டு தேர்தல் வைப்பதாக இருந்தால் நாடாளுமன்றத்தில் குறை நிறைப்பு பிரேரனை ஒன்றைக் கொண்டுவந்து நிதியை ஒதுக்கிதான் தேர்தலை வைக்கமுடியும். எழுந்தமானமாக இரண்டு தேர்தல்களை வைப்பதற்கான சாத்திய கூறு இல்லை

வடக்குக் கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினை. இதனை இலங்கை அரசு இந்திய அரசுடன் பேசித் தீர்க்க வேண்டும். அதேவேளை தமிழனாக இருக்கின்ற கடற்றொழில் அமைச்சர் முயற்சி செய்து கொண்டிருக்கின்றார். அவர் தன்னுடன் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஒத்துழைத்தால் தமிழ் நாடு அரசுடன் பேசத் தயாராக இருக்கிறார் எனக் கூறுகின்றார். அப்படி ஓர் அழைப்பு அரசு ஊடாக வருமாக இருந்தால் நாங்கள் எமது மீனவர்களின் பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைப்பதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம்.

அதேவேளை புதிதாக தெரிவு செய்யப்பட்ட தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தபோது அவர் அதனை நிராகரித்தார் என ஊடகங்கள் ஊடக அறிந்தேன். அதனை ஏனைய எதிர்கட்சிகளும் பகிஷ்கரித்துள்ளன. இந்த நிலையில் எம்.சுமந்திரன் பங்கு பங்குபற்றியிருந்தார். அவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினை பிரதிநிதித்துவப்படுத்தி இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

இரண்டு நாள்களுக்கு முன்னர் கொழும்பில் றோயல், தோமியன் கல்லூரி அணிகளுக்கிடையே இடம்பெற்ற கிரிக்ட்போட்டியில் சுமந்திரன், ஜனாதிபதி ரணில் அருகில் இருந்து கண்டு களித்தனர். இதன் போது ஜனாதிபதி தனிப்பட்டரீதியில் சுமந்திரனிடம் நீயாவது மானத்தைக் காப்பாற்ற கூட்டத்திற்கு வர வேண்டும் என்ற ரீதியில் கேட்டிருக்கலாம் .அதற்காக அவர் சென்றிருக்கலாம்.

தற்போதைய வெளிநாட்டு அமைச்சர் நாடாளுமன்றத்தில் தமிழர்கள் சமஷ்டியைக் கோருவதற்கு உரித்துடையவர்கள் என பேசியமையை வரவேற்கின்றேன். அவர் தற்போது உணர்ந்திருக்கின்றார். அதேபோல ஜனாதிபதி உட்பட ஏனைய அரசியல்வாதிகள் புரிந்துகொள்ளவேண்டும்.

எனவே அதிகாரங்களை பரவலாக்கி, மாகாணங்களுக்கு அதிகாரங்களை கொடுத்தால் புலம் பெயர்ந்த தமிழர்கள் இந்த நாட்டிலே வந்து முதலீடுகள் செய்யத் தயாராக இருக்கின்றனர்.

அதிகாரங்கள் பரவலாக்கப்படாமல் – அவர்களது முதலீடுகளுக்குப் பாதுகாப்பு இல்லாமல் – அவர்கள் எக்காரணம் கொண்டும் வரமாட்டார்கள். வருகின்ற ஒரு சிலரை புலிப் பினாமிகள் எனக் கூறும் அளவிற்கு இந்த நாட்டு அரசியல்வதிகள் இருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா ரொலிக்கொம்மை தனியார் மயப்படுத்த அரசாங்கம் எத்தனிக்கும் போது தமிழரான லைக்கா நிறுவனத்தில் உரிமையாளர் அதனை வாங்க முயற்சிக்கின்றார். அப்போது அவர் தமிழன் என்பதற்காக அதை வருக்குக் கொடுக்கக் கூடாது எனக் கூறும் அரசியல்வாதிகள் இங்கு இருந்தால் இந்த நாடு எக் காலத்திலும் உருப்படாது.

69 லட்சம் சிங்கள வாக்குகளால் ஆட்சிக்கு வந்த கோட்டா அறகலய போராட்டம் ஊடாக பலவந்தமாக வெளியேற்றப்பட்டார். அவர் வெளியிட்ட புத்தகத்தில் சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம்கள் செய்த சதிவலையால் தாம் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார் என அவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மீண்டும் ஓர் இனவாதத்தை – இனமுறுகலை – குழப்பத்தை – ஏற்படுத்தும் ஒரு சதியாகப் பார்க்கின்றோம்.

அவர் 2019 இல் எப்படி ஈஸ்டர் குண்டுவெடிப்பை உருவாக்கி, அதன் மூலமாக ஜனாதிபதியாக வந்தவர் என்பது இந்த நாட்டு மக்களுக்கு தெரியும். அவர் என்ன சதி செய்து இந்த நாட்டு ஜனாதிபதியாக வந்தாரோ அதே சதியினால் வீழ்தப்பட்டார் என்பதுதான் உண்மை.

எனவே இந்த நாட்டில் சுபீட்சத்துடன், இன ஐக்கியம் ஏற்பட வேண்டுமாயின் அதிகாரங்கள் பலவலாக்கப்பட வேண்டும். – என்றார்.




# வளர்மதியின் கிரிக்கெட் தொடரில் சம்பியனானது கொக்குவில் மத்தி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் 33ஆவது வருட விக்ரம் – ராஜன் – கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி (KCCC) சம்பியன் கிண்ணத்தைத் தட்டிச்சென்றது.

கடந்த வருட சம்பியனான Grass Hoppers அணிக்கும் KCCC அணிக்கும் இடையில் கடந்த ஞாயிறன்று இறுதிப் போட்டி நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய KCCC, 40 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 197 ஓட்டங்களைப் பெற்றது. ஜெயரூபன் சிறப்பாக ஆடி 71 ஓட்டங்களைப் பெற்றார் . Grasshoppers அணியின் ரசிகரன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார் .

பின்னர் 198 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய Grasshoppers அணி, 26.1 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதனால், KCCC அணி 108 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

Grasshoppers அணி சார்பாக ஆகக்கூடுதலாக வரலக்ஷன் 30 ஓட்டங்களைச் சேர்த்தார்.

KCCC அணி சார்பாக பந்துவீச்சில், சாம்பவன் 5 விக்கெட்டுக்களையும், துஷியந்தன் 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் சிறந்த வீரருக்கான விருதை KCCC இன் சாம்பவனும், தொடருக்கான சிறந்த வீரர் விருதை துஷ்யந்தனும், தொடரின் அதிக ஓட்டங்களைச் சேர்த்தவருக்கான விருதை ஜெயரூபனும், தொடரின் அதிக விக்கட்டுக்களை சாய்த்தவருக்கான விருதை சாம்பவனும் பெற்றுக்கொண்டனர்.

# காரைதீவு பிரதேச மட்டத்திலான எல்லே போட்டிகளின் சம்பியன்கள்

**( வி.ரி.சகாதேவராஜா)**

காரைதீவு பிரதேச மட்டத்திலான எல்லேப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் காரைதீவு விவேகானந்தாவும் பெண்கள் பிரிவில் காரைதீவு விளையாட்டுக் கழகமும் சம்பியனாகின.



இப் போட்டி அண்மையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில நடைபெற்றன.

இதன், பெண்களுக்கான எல்லேப் போட்டியில் காரைதீவு விளையாட்டு கழகம் சம்பியனாகத் தெரிவானது.

காரைதீவு ஜொலிக்கின்ஷ் விளையாட்டு கழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

அதேவேளை, ஆண்களுக்கான எல்லே போட்டியில் காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகம் சம்பியனாகவும் காரைதீவு ஜொலிக்கிங்ஷ் விளையாட்டுக்கழகம் இரண்டாவது இடத்தையும் பெற்றன.



# இன்றைய ராசி பலன்கள் - 13.03.2024

## மேஷம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைப்பது அரிது. இன்று சௌகரியங்களை இழக்க நேரலாம். அது உங்களுக்கு கவலையைத் தரும். இன்று சராசரியையும் விட சற்று மேலான நாள்.

பணியில் திறம்பட செயலாற்ற ஒழுங்கான நடைமுறையைப் பின்பற்ற வேண்டியது அவசியம். அது நீங்கள் வெற்றி பெறுவதற்கான வழிகாட்டியாக அமையும்.

இன்றைய நாள் நல்லுறவிற்கு சாதகமாக காணப்படாது.அலுவலகப் பணிச்சுமை மற்றும் உடல் நலக் கோளாறு காரணமாக உறவில் பாதிப்பு ஏற்படும்.

இன்று பணம் அதிக அளவில் செலவாகும்.எனவே திட்டமிட்டு பயனுள்ள வகையில் பணத்தைச் செலவு செய்ய வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.

## ரிஷபம்

இன்று தடைகளும் தாமதங்களும் காணப்படும். முக்கியமான முடிகளை தள்ளிப்போடுவது நல்லது. ஓய்வு நேரத்தில் இசையைக் கேட்டு இன்புறுங்கள்.

இன்று பணியிடச் சூழல் சாதகமாக இல்லை.உங்கள் சக பணியாளர்களுடன் ஒத்துப் போவதன் மூலம் உங்கள் பணிகள் சுமுகமாக நடக்கும்.

காதலில் சுமுகமான உறவு இருக்காது. உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக காணப்படுகின்றது.

இன்று வீட்டை புதுப்பிப்பதற்கு பணம் செலவாகும். எனவே கட்டுக்கடங்காத செலவினங்கள் காணப்படும்.

கால்வலி மற்றும் முதுகு வலி காணப்படலாம்.ஓய்வும் அமைதியும் தேவை.

## மிதுனம்

இன்றைய நாள் சீராக இருக்கும். இன்று அமைதியான மனநிலை காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். முக்கியமான முடிவுளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

இன்று பணியில் சுமுகமான நற்பலன்கள் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் திறமைகளைப் பாராட்டுவார்கள்.

இது காதலுக்கு உகந்த நாள். உங்கள் காதல் உணர்வுகளை வெளிப்படையாக காண்பிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி அனுகூலமாக இருக்கும். நீங்கள் புத்திசாலித்தனமாக பணத்தை கையாளுவீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்ல தேகநிலை காணப்படும்.

## கடகம்

இன்று லாபகரமான நாளாக இருக்கும். புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் இருப்பீர்கள். புதிய முயற்சிகள் இன்று லாபத்தை அளிக்கும்.

இன்று வேலைவாய்ப்புகள் மிகவும் நன்றாக இருக்கும் மற்றும் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். நீங்கள் தொழில் முறையுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை கையாள்வீர்கள். இதன் மூலம் உங்கள் துணை உறவின் மதிப்பை உணர்ந்து கொள்வார்.

உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போதுமான பணம் காணப்படும்.அதிக சேமிப்பும் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக நீங்கள் திடமாக இருப்பீர்கள்.

## சிம்மம்

இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று படபடப்புடன் காணப்படுவீர்கள். நீங்கள் எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு அனுசரித்து நடந்து கொண்டால் அனைத்தும் நன்றாக இருக்கும். முக்கியமான முடிவுகள் அல்லது புதிய முயற்சிகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணியிடத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்காது. உங்கள் சகபணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படலாம்.

உங்கள் வீட்டின் புணரமைப்பு அல்லது வளர்ச்சி குறித்து உங்கள் தாயிடம் விவாதிப்பீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

பணவளர்ச்சி சிறப்பாக காணப்படாது. தேவையற்ற செலவினங்களை சந்திக்க நேரிடும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.

## கன்னி

இன்றைய நாள் சிறந்த நாளாக அமையாது. சில அசௌகரியங்களை உணர்வீர்கள். உங்கள் கவலை மற்றும் பாதுகாப்பற்ற உணர்வை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் தேவையில்லை. நேர்மறையாக எண்ணுவதன் மூலம் நீங்கள் சாதிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை மிகவும் தைரியத்துடனும் நேர்மறை எண்ணங்களுடனும் ஆற்றுவீர்கள். அதனால் பணியில் ஏற்படும் தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையை சமாதானப்படுத்துவதை கடினமாக உணர்வீர்கள். எனவே அவரை சந்திப்பதை தவிர்ப்பது நல்லது.

பணவரவுக்கான வாய்ப்பு இல்லை. இன்று செலவினங்கள் அதிகமாக இருக்கும்.

## துலாம்

இன்றைய நாள் சீராக உள்ளது. திருப்தி கிடைப்பதற்கு சாத்தியக்கூறுகள் உள்ளன. இன்று புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள். உங்கள் வேலைக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

ஒரு நல்ல முடிவுக்கு வருவதன் மூலம் உங்கள் வாழ்க்கையின் போக்கை நீங்கள் தீர்மானிக்க முடியும். உங்கள் பிரியமானவரை சந்திப்பதன் மூலம் இது சாத்தியம்.

பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் முகத்தில் உற்சாகம் நிறைந்து காணப்படும்.

நல்ல ஆற்றலும் மனஅமைதியும் காணப்படும். அதனால் ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.

## விருச்சிகம்

இன்று மிகவும் நல்ல நாள். புதிய நண்பர்கள் மற்றும் அவர்களது ஆதரவு கிடைக்கப் பெறுவீர்கள். அது உங்களுக்கு பயனுள்ள முன்னேற்றத்தை அளிக்கும். வசதிகளும் மகிழ்ச்சியும் கிடைக்கும். தியானம் மேற்கொள்வது மிகவும் சிறந்தது.

இன்று ஓய்வின்றி உழைப்பீர்கள். சவாலான சில பணிகள் உங்கள் திறமைகளை சோதிக்கும். உங்கள் பணியில் நீங்கள் நன்கு வளர்வீர்கள்.

உங்கள் துணையுடனான உறவு சிறந்த முறையில் இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவும் செலவும் சேர்ந்து காணப்படும். பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.அதிக சிரமங்கள் காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் - 13.03.2024




இன்றைய நாள் சாதகமாக இல்லை. இன்று நீங்கள் மிகவும் உணர்ச்சி வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். அதனை தவிர்க்க வேண்டும். இயல்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது உங்களுக்கு மிகவும் நல்லது.

சகபணியாளர்களுடன் சில மோதல்கள் காணப்படும். நீங்கள் மேற்கொண்டிருக்கும் உங்கள் பணி சம்பந்தமாக சில பதட்டங்கள் உங்களிடம் காணப்படும்.

உங்கள் துணையை சந்திப்பதை தவிர்த்தல் நலம். சூடான விவாதங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

பணவளர்ச்சி சிறப்பாக இருக்காது. பணஇழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளன.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். இரவில் குறைந்த தூக்கம் காணப்படும். அதனால் ஓய்வின்மை காணப்படும். அது உங்களுக்கு கவலையைத் தரும்.




இன்று மிகவும் அனுகூலமான நாள் இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை எதிர்பார்க்கலாம். முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

சிறப்பாகப் பணியாற்றுவதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். சிறந்த பலனைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரியிடம் நற்பெயர் சம்பாதிப்பீர்கள்.

இன்றைய தினத்தை மகிழ்ச்சிகரமானதாக ஆக்குவீர்கள். உங்கள் துணையுடன் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் கிடைக்கும். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். நீங்கள் ஸ்திரமாகவும் அதிக திடத்துடனும் காணப்படுவீர்கள்.




இன்றைய நாள் உங்களுக்கு துடிப்புடன் இருக்காது. ஆன்மிக காரியங்கள் மற்றும் பிரார்த்தனை உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருந்தால் துடிப்புடன் உணரலாம். பொறுமை மற்றும் உறுதியான அணுகுமுறை தேவை.

பணியைப் பொறுத்தவரை சாதகமாக இல்லை. அதிகரிக்கும் பணிச்சுமை கவலையை அளிக்கும். உங்கள் சகபணியாளர்களிடம் நல்லுறவு பராமரிக்க இயலாது.

உங்கள் துணையை சந்திப்பதை தவிரத்தல் நலம். உங்களிடம் காணப்படும் கருத்து வேறுபாடு காரணமாக இருவருக்கிடையே மோதல்கள் ஏற்படும்.

இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும். அதிகமான எதிர்பார்ப்புகள் கூடாது.




இன்றைய நாள் சாதகமாக இல்லை. ஆன்மீக பயணங்கள் மூலம் இன்றைய நாளை நீங்கள் சாதகமான நாளாக மாற்றிக் கொள்ளலாம். அதன் மூலம் நற்பலன்கள் கிடைக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். பணியிடத்தில் நீங்கள் அதிக பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும்.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் காட்டுவீர்கள். அதனால் எந்தப் பயனும் இல்லை. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்புகள் ஏற்படும். பணத்தைக் கையாள்வதில் விழிப்புணர்வு அவசியம்.

மனதில் காணப்படும் பதற்றம் காரணமாக கால்களில் வலி காணப்பட்டும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94777 546 546 | +94770 774774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயக் கைது விவகாரம்:
# மக்கள் எழுச்சி மூலமே நீதியை நிலைநாட்ட முடியும்!

## இப்படிக் கூறி அதற்கு அழைப்பு விடுக்கின்றார் வேலன் சுவாமி

**(கே.வசந்தன்)**

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலய வழிபாட்டின் போது கைது செய்யப்பட்டர்கள் தொடர்பில் மக்கள் எழுச்சி மூலமே நீதியை நிலைநாட்ட முடியும் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

வவுனியா நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வெடுக்குநாறி ஆலய வழக்கு விசாரணையின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறி ஆலயத்தில் பொலிசாரால் அடாவடியாக, அராஜகமாகக் கைது செய்யப்பட்ட பூசகர் உட்பட 8 பேரினதும் வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. 19 ஆம் திகதிக்கு வழக்கு திகயிடப்பட்டுள்ளது. எந்தவித ஒரு நியாயமும் இல்லாமல், எந்தவித ஒரு நியாயமான காரணங்களும் இல்லாமல், தொல்பொருள் திணைக்களத்தின் அறிக்கை மிகவும் பொய்யான விதத்தில் வழங்கப்பட்டு இந்த நிலை ஏற்பட்டுளது.

எங்களை விட அங்கிருக்க கூடிய தொல்பொருள் திணைக்களத்தினர் தான் பலவித மீறல்களை, அத்து மீறல்களை செய்கின்றனர். சிறிலங்கா பொலிஸாரின் அடாவடி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. கைவிலங்குடன் சிறையில் வாடிக் கொண்டிருக்கும் எமது உறவுகள் 8 பேரும் ஒழுங்கான உணவின்றி, மிகவும் வேதனையாக இருகிகிறார்கள். அவர்களது உறவினர்கள் மிகவும் வேதனையுடன் இருகிறார்கள்.

இந்தச்சூழ் நிலையில், ஈழத் தமிழினமாக மக்கள் எழுச்சிப் போராட்டத்தை வடக்கு – கிழக்கு தழுவி வவுனியாவில் போராட்டத்தை நடத்த வேண்டும். மக்கள் எழுச்சிதான் இலக்குகளை அடையவும், நீதியை நிலை நாட்டவும் செய்யும். சிவராத்திரி தினத்தன்று கூட ஒவ்வொரு போராட்டமாகத்தான் அந்த நிகழ்வை செய்ய முடிந்தது. போராட்டம் மூலமே இலக்கை அடைய முடியும். பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், தமிழ் தேசியப்பற்றார்கள், பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு போராட வேண்டும். அதற்கான ஒத்துழைப்பை அனைவரும் வழங்க வேண்டும் என வேண்டி நிற்கின்றேன். – எனத் தெரிவித்தார்.

# தொல்லியல் திணைக்களம் பொய்யான அறிக்கை:
# மேன் முறையீடு செய்யப்படும் என்கின்றார் சுகாஷ்!

**(கே.வசந்தன்)**

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக தொல்லியல் திணைக்களம் பொய்யான அறிக்கை வழங்கியுள்ளது. நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யவுள்ளதாக ஆலயம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி க.சுகாஷ் தெரிவித்தார்.

இது தெர்டர்பில் அவர் நேற்றுக் கருத்து தெரிவித்த போது கூறியவை வருமாறு:–

வெடுக்குநாறி ஆலயத்தில் கைது செய்யப்பட்ட எட்டு அப்பாவி சந்தேக நபர்கள் தொடர்பான வழக்கு மன்றிற்கு அழைக்கப்பட்டது. காலையில்



இருந்து பெரும் சட்டப் போரட்டமாகவே அது அமைந்திருந்தது. இருப்பினும் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பாக நாம் மேன்முறையீடு செய்யவுள்ளோம்.

அந்த எட்டுபேர் மீதும் எந்தவிதமான தவறும் கிடையாது. அவர்களுக்கு நீதி கிடைக்கின்ற வரை நாம் தொடர்ச்சியாக போராடுவோம். இந்த சந்தேக நபர்கள் தொல்லியல் சின்னங்களிற்கு சேதத்தினை ஏற்படுத்தினர் எனத் தொல்லியல் திணைக்களம் உண்மைக்கு புறம்பான ஒரு பொய்யான அறிக்கையை நீதி மன்றிலே தாக்கல் செய்துள்ளது.

உண்மையில் அவ்வாறான எத்தகைய சேதங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனை நாம் மேன் முறையீட்டிலும் விளக்கத்தின் போதும் நிரூபிப்போம். – என்றார்.

# பல்கலை கல்விசாரா ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில்!

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் நேற்று நண் பகலில் இருந்து இன்று முழுநாளும் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடு பட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் நேற்று முன்தினம் 11 ஆம் திகதியிடப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் இந்த அடையாள வேலைநிறுத்தம் இடம்பெறுகின்றது.

அனைத்துப் பல்கலைக்கழகங் களிலும் பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளிற்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வை வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வை வேண்டியும் இத்தகைய அடை யாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடு வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் திலும் நேற்று நண்பகல் 12 மணியி லிருந்து இன்று முழுநாளும் அடை யாள வேலை நிறுத்தப் போராட்டத் தினை பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொள்கின்றது என்று யாழ்ப்பா


பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
யாழ். பல்கலைக்கழகம் - யாழ்ப்பாணம்

சகல பல்கலைக்கழகப் பணியாளர்களுக்கும்,

அடையாள வேலைநிறுத்தம்
2024 மார்ச் 12, நண்பகல் 12மணியிலிருந்து மார்ச் 13 முழு நாளும்

ணப் பல்கலைக்கழக ஊழியர் சங்க இணைச்செயலாளர் த.சிவரூபன. தெரிவித்தார்.



# வவுனியா நகர வீதிகளில் அலைந்து திரிந்த 8 கட்டாக்காலி மாடுகள் மடக்கிப் பிடிப்பு!

(வசந்தன்)

வவுனியாவில் போக்குவரத் திற்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாக வீதிகளில் நடமாடித்திரிந்த 8 கட்டாக் காலி மாடுகள் பிடிக்கப்பட்டு வவுனியா நகரசபை வளாகத்தில் அடைக்கப் பட்டன.

நேற்று முன்தினம் இரவு வவுனியா பண்டாரிக்குளம், வைரவர்புளியங் குளம் மற்றும் நகர மத்தி ஆகிய பகுதி களில் இருந்து இந்த மாடுகள் பிடிக் கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மாடுகளின் உரிமையாளர்கள் 2 ஆயிரம் ரூபா தண்டப்பணத்தை நகர சபைக்குச் செலுத்தி அவற்றை மீளவும் பெற்றுக் கொள்ளமுடியும் என நகர சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.






# இந்தியன் ரோலர் படகுகளை உடன் தடுத்து நிறுத்துங்கள்! பதில் இல்லையேல் 25 இற்குப் பின்னர் தொடர் போராட்டம்!!

## மீனவர் சங்கங்கள் எச்சரிக்கை; தூதரகத்திடம் மகஜரும் கையளிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழையும் இந்தியன் ரோலர் படகுகளைத் தடுத்து நிறுத்துமாறு கோரி நேற்று தீவகப் பகுதி தெற்கு வேணைப் பிரதேச கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினர், யாழ். இந்தியத் துணைத் தூதரகத்திடம் மகஜர் கையளித்ததுடன் கண்டனப் போராட்டத்தையும் முன்னெடுத்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"அத்துமீறிய இந்திய ரோலர் படகுகளால் தொடர்ச்சியாக எமது வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

அத்துமீறிய ரோலர் படகுகளைத் தடுத்து நிறுத்துமாறு இலங்கை மற்றும் இந்திய அரச உயர்மட்டம் வரை மகஜர்களைக் கையளித்தது மட்டுமல்லாது கண்டனப் போராட்டங்களையும் மேற்கொண்டோம்.

ஆனால், எமது கோரிக்கை தொடர்பில் இந்திய அரச உயர்மட்டம் இதுவரை சாதகமான பதில் எதுவும் வழங்கவில்லை.

ஆகவே, எமது கோரிக்கை அடங்கிய மகஜருக்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். இந்தியத் துணைத் தூதரகத்திடம் வழங்கியுள்ளோம்.

எமது மகஜருக்கான பதிலை இம் மாதம் 25 ஆம் திதிக்கு முன்னர் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ள நிலையில் வழங்காத சந்தர்ப்பத்தில் 25ஆம் திகதிக்கு பின்னர் மாபெரும் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம்." - என்றுள்ளது.

குறித்த கண்டனப் போராட்டத்தில், "அடிக்காதே அடிக்காதே மீனவர் வயிற்றில் அடிக்காதே!", "இந்திய அரசே தமிழக ரோலரைத் தடுத்து நிறுத்து!!", "தொப்புள் கொடி உறவே நமது கடல் வளத்தை அழிக்காதே!!!" போன்ற வாசகங்களை ஏந்தியவாறு கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தீவகம் தெற்கு கூட்டுறவு சமாசங்களின் தலைவர் ஆறுமுகம் கனகசபை, யாழ். மாவட்ட கிராமிய கடற்தொழிலாளர் கிராமிய கூட்டுறவு சங்கங்களின் தலைவர் செல்லத்துரை நற்குணம், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் ஸ்ரீகந்தவேல் புனிதப் பிரகாஷ் மற்றும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் உப தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரட்ணகுமார் உட்பட மீனவர் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.









# இந்தியத் துணைத் தூதுவர் வடக்கு ஆளுநருடன் பேச்சு





வடக்கில் முன்னெடுக்கப் படக்கூடிய சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து வடக்கு ஆளுநருடன் இந்திய உயர் அதிகாரிகள் கலந்துரையாடல் நடத்தினர்.

வடக்கு மாகாணத்தில் காணப்படும் சுற்றுலாத் தளங்களை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதுவர் கலாநிதி சத்வஞ்சல் பாண்டே உள்ளிட்ட குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் செவிதி சாய் முரளியும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

பலாலி விமான நிலைய அபிவிருத்தி, சென்னையிலிருந்து பலாலிக்கான விமான சேவையை அதிகரித்தல், காங்கேசன்துறைக்கும் தூத்துக்குடிக்குமான பயணிகள் கப்பல் சேவை போன்ற திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப் பட்டது. அத்துடன் இயற்கை சக்தி வளங்களை பயன்படுத்தி மின்னுற்பத்தியை மேற்கொள்ளுதல் மற்றும் வடக்கில் முன்னெடுக்கக்கூடிய ஏனைய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் ஆளுநருடன் கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

# தென்கிழக்குப் பல்கலையில் பகிஷ்கரிப்புடன் கவனவீர்ப்பு




நாடு முழுவதும் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகையில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் நேற்று நண்பகல் முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் ஒன்றுகூடிய கல்விசாரா ஊழியர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்பில் ஈடுபட்ட பின்னர் பணிப்பகிஷ்கரிப்பை தொடர்ந்தனர்.

சம்பள முரண்பாட்டை தீர்க்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியும், கல்விசாரா ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தும் கவனவீர்ப்பும் பணிப்பகிஷ்கரிப்பும் முன்னெடுக்கப் படுகின்றது.